### சக்கரபாணி அமைச்சராக இருந்தபோது கிடங்குகளை அதிகமாகக் கட்டினார்!

# இன்றைக்கு ரேசன் அரிசியை அனைத்து மக்களும் சாப்பிடுகிறார்கள்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பதில்!

சென்னை, ஆக.22-

சட்டப்பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேசுகையில் சக்கரபாணி அமைச்சராக இருந்தபோது நிறைய குடோன்கள் கட்டினார் என்றும், இன்றைக்கு ரேஷன் அரிசியை அனைத்து மக்களும் சாப்பிடுகிறார்கள் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில் உணவு கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கையில் கழகம் சார்பில் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பேசும்போது குறுக்கிட்டு அவை முன்னவர் எழுந்து ரேஷன் அரிசியை கடந்த காலத்தில் ஆட்டுக்கு, கோழிக்கும்தான் அதனை தீவனமாகப் பயன்படுத்தினார்கள் என்று பேசினார்.

அப்போது குறுக்கிட்டு எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு எழுந்து, என்ன அர்த்தத்தில் அப்படி சொல்கிறீர்கள், ஆட்டுக்கும், மாட்டுக்கும் என்பதெல்லாம் இல்லை. குறிப்பாக உங்களுக்கு அரிசி எப்படி கொடுப்போம் என்று சொன்னால், இந்த உணவு துறையை முப்பது வருடத்திற்கு முன்பு நானும் பார்த்தேன்.

கருப்பாக இருக்கிற அரிசி கடைசி நேரம் வேறு வழி.. அப்போதெல்லாம் அரிசி கிடைப்பது கஷ்டம், சென்ட்ரல் போர்டில் இருந்து கிடைக்கிறது கஷ்டம். அப்போது ஒரு மாசத்துக்கு அரை மாதத்துக்கு கொடுப்பாங்களேத் தவிர, உணவுத் துறை அமைச்சராக சக்கரபாணி வந்தபிறகு பாதுகாப்பான குடோன், எந்த காலத்தினும் எந்த உணவு அமைச்சரும், வேலுவும் உணவு அமைச்சராக இருந்தார், நானும் உணவு அமைச்சராக இருந்தேன். ஆனால் அவர் தான் நிறைய கட்டினார். அவருடைய காலத்தில் தளபதி அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி நெல்லை நனையாமல் கொண்டு சேர்த்தது சக்கரபாணி.

**சர்க்கரை அளவு குறைகிறது!**

அவை முன்னவர் சொல்கிறார், ஆட்டுக்கும் மாட்டுக்கும் என்று. ஆட்டுக்கும் மாட்டுக்கும் அல்ல, இன்றைக்கு ரேஷன் அரிசி எல்லா மக்களும் சாப்பிடுகிறார்கள். காரணம். ரேஷன் அரிசி சாப்பிடுகிற போது அந்த சர்க்கரை அளவு குறைகிற காரணத்தினால் எல்லா மக்களும் அதனை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் எப்படி காலையில் எழுந்தவுடன் நெல்லிக்காய் ஜூஸ் குடிப்பேன் என்று பேட்டி கொடுக்குறீர்களோ, அது மாதிரி இன்றைக்கு ரேஷன் அரிசியை எல்லா மக்களும் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு குறுக்கிட்டு பேசினார்.

---

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பாக - கழக இளைஞர் அணிச் செயலாளர்

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஆக. 22-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், முன்னாள் அமைச்சர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



கழக இளைஞர் அணி செயலாளர், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள 22.08.2026 சனிக்கிழமை அன்று மாலை 07.00 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தர உள்ளார்கள். அவருக்கு திருச்சி விமான நிலையத்தில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், வட்டம், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத் தொண்டர்கள், தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### ஈரோடு மாவட்டத்தில் 148 மாற்றுத்திறனாளிகளுக்கு

# ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி. கோரிக்கையை ஏற்று ALIMCO நடவடிக்கை!

ஈரோடு, ஆக.22-

ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவி உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, ஈரோடு நாடாளு மன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் ALIMCO (Artificial Limbs Manufacturing Corporation of India) நிறுவனத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.



ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, ALIMCO நிறுவனம் மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவுடனும் ஒருங்கிணைப்புடனும் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மதிப்பீட்டு முகாம்களை நடத்தி, உதவி உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத்திறனாளி பயனாளிகளை அடையாளம் காணும் பணியை மேற்கொண்டது.

இந்த மதிப்பீட்டு முகாம்களின் மூலம் 148 தகுதியான மாற்றுத்திறனாளி பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மத்திய அரசின் ADIP (Assistance to Disabled Persons for Purchase/Fitting of Aids and Appliances) திட்டத்தின் கீழ் சுமார் ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

பயனாளிகளின் தேவைக்கேற்ப சக்கர நாற்காலிகள், நடை உதவி உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

அடுத்தகட்டமாக, அடையாளம் காணப்பட்ட 148 பயனாளிகளுக்கும் உதவி உபகரணங்களை வழங்குவதற கான விநியோக முகாமை ஈரோடு மாவட்டத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

“ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவி உபகரணங்கள் இலவசமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக ALIMCO நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று ALIMCO நிறுவனம் மதிப்பீட்டு முகாம்களை நடத்தி 148 பயனாளிகளை அடையாளம் கண்டுள்ளது. தற்போது அவர்களுக்கு ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த உதவிகள் உரிய பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்வதுடன், ஈரோடு மாவட்டத்தில் தகுதியான அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் அரசு நலத்திட்டங்களின் பயன்கள் கிடைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்” என ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

---

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் – நெல்லை – தூத்துக்குடி மாவட்ட

# ‘முரசொலி’ முன்னாள் நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழா!

## மாவட்டச் செயலாளர்கள் - பொறுப்பாளர்கள் - கழக நிர்வாகிகள் - முன்னோடிகள் பங்கேற்பு!

நெல்லை, ஆக. 22-

கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும் நெல்லை தூத்துக்குடி மாவட்ட ‘முரசொலி’ முன்னாள் நிருபர் க.மணிகண்டன் இல்லத் திருமண விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.



தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துகளுடன், கழக தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர், உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் கழக துணை பொதுச் செயலாளர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நெல்லை தூத்துக்குடி மாவட்ட ‘முரசொலி’ முன்னாள் நிருபர் க.மணிகண்டன் - ம.வேலம்மாள் ஆகியோரது மகளும், திருப்பூர், கோவை மாவட்ட முரசொலி நிருபர், திருப்பூர் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் க.பழனியப்பன் - ப.கமலக் கண்ணா ஆகியோரின் அண்ணன் மகளும், தூத்துக்குடி மாவட்ட முரசொலி நிருபர் ம.பாலாஜி, பா. லெட்சுமி பாரதி ஆகியோரின் தங்கை, ம.சிவசங்கரி (எ) முத்து லெட்சுமி, சென்னை. செ.முருகேசன் ரா.எம்மியம்மாள் ஆகியோரின் திருமகன் திருவளர் நம்பி செ.மு.முபேஷ் ஆகியோரது திருமண விழா, 23.08.2026 ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி, காப்பர் லீப் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாவட்டக் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் இந்நாள், முன்னாள் பிரதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்பட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கழக உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக பங்கேற்று விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.

---




கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி ஏற்பாட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி கவுன்சிலராக 10 ஆண்டுகள் பொறுப்பு வகித்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எஸ்.கண்ணன், மலுமிச்சம்பட்டி ஔவை நகர் அ.தி.மு.க. பிரதிநிதி டி.முருகானந்நம், பா.ஜ.க. உறுப்பினர் சி.தேவதாஸ், அ.தி.மு.க. சிறுபான்மையினர் தலைவர் ஜி.ஏ.கான் உள்ளிட்ட மாற்றுக் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். உடன் மதுக்கரை மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெ. நந்தகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி தலைவர் சீரபாளையம் செந்தில் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மே.சு. சண்முகசுந்தரம்
### ஆகஸ்ட் 22 (2021)



**இளமைப் பருவத்திலேய கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.**


**1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.**

**அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

---




மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

மறைதிரு. **க.சொ.கணேசன்** Ex.MLA அவர்கள்

**தோற்றம் : 03-06-1941 | மறைவு : 22-08-2005**

“ஜெயங்கொண்டம் பகுதியில் பல எதிர்ப்புகளையும், இழப்புகளையும் சந்தித்து, எது நேர்ந்தபோதும் கழகப் பணியில் பின்வாங்காது நின்ற **கொள்கைவாதி, சிறந்த செயல்வீரர்!**”

செப் - 06 - 2005

என்றும் உங்கள் இலட்சிய பாதையில் பயணிக்கும்...

**க.சொ.க.கண்ணன்** M.Com.,
மேனாள் சட்டமன்ற உறுப்பினர் - ஜெயங்கொண்டம்,
ஒன்றிய கழக செயலாளர் - தா.பழூர் (கிழக்கு).
மற்றும் **குடும்பத்தினர்கள்**

**ஒன்றிய தி.மு.க, தா.பழூர்.**